மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-25

(ஊ) நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2014), மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@20-2-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு முன்மொழியப்பட்டிருக்கின்ற சட்டமுன்வடிவு என்பது மத்திய அரசினால் நிறைவேற்றப்பெற்றிருக்கிற நிலம் கையகப்படுத்துவது மற்றும் மறு குடியமர்வு சட்டத்தை தமிழ்நாட்டிற்குப் பொருத்துவது என்கின்ற அடிப்படையில் முன்மொழியப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே மத்திய அரசு 13 சட்டங்களை நிறைவேற்றியிருக்கிற சட்டத்திலிருந்து விதிவிலக்குக் கொடுத்து, அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே நிலம் கையகப்படுத்தப்பட்டால் அதற்கு உயர்ந்த நஷ்டஈடோ மற்றவையோ கோர முடியாது என்று விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். அதையே பாராளுமன்றத்தில் எல்லாக் கட்சிகளும் எதிர்த்தும், அதை மீறி அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். இப்பொழுது அந்த 13 சட்டங்களோடு, தமிழ்நாட்டில் இருக்கிற 3 சட்டங்களையும் சேர்க்கிறபொழுது நாம் புதிதாக கொண்டு வந்திருக்கிற நிலம் கையகப்படுத்துகிற சட்டத்தின் அடிப்படையில் அவர்களுக்குரிய நஷ்ட ஈட்டைப் பெற முடியாத நிலைமை தமிழ்நாட்டில் ஏற்பட்டுவிடும். அதிலேயும் குறிப்பாக தொழில் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்தப்படுகிறபோது அவர்களுக்கு உரிய நஷ்ட ஈடு கிடைப்பதற்கு இந்தச் சட்டம் தடை செய்கிறது. நிலம் கையகப்படுத்தக் கூடாது என்பது அல்ல பிரச்சினை. ஆனால், புதிய சட்டத்தின்படி அவர்களுக்கு உயர்ந்த நஷ்ட ஈடும், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வில் இருக்கிற அத்தனையும் அந்தச் சட்டத்தினாலே தடை செய்யப்படுகிற காரணத்தினாலே, இதிலே குறைந்தபட்சம் தமிழ்நாடு தொழில் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்தும் இந்தச் சட்டத்தை ஐந்தாவது இணைப்புப் பட்டியலிலே சேர்ப்பதிலிருந்து விலக்கி, தமிழ்நாட்டிலே நிலம் கையகப்படுத்தப்பட்டால் அதிகபட்சமான நஷ்ட ஈட்டை பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும். எனவே, இந்த அம்சத்தை நீக்க வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

2014 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோக்கக் காரண விளக்க உரையில் சட்ட முன்வடிவைப் பற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும், மத்திய அரசால் இயற்றப்பட்ட புதிய நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின்கீழ் 4-வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 13 நிலம் கையகப்படுத்தும் மத்திய சட்டங்களைத் தொடர்ச்சியாகச் செயல்படுத்த பிரிவு 105-ன்கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒரு வருட காலத்திற்குள் சட்டங்களை மாற்றியமைத்து நில உரிமைதாரர்களுக்கான இழப்பீட்டை புதிய சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு நிர்ணயம் செய்யவும் வழிவகுக்கப்பட்டுள்ளது. நமது மாநிலத்திலும் நிலம் கையகப்படுத்த மூன்று மாநிலச் சட்டங்கள் உள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 'விஷன் 2023' இலக்கை அடையவும், வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் பல்வேறு சமூக நலத் திட்டங்களின் நோக்கம் நிறைவேறவும் மேற்படி மூன்று மாநிலச் சட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவது அவசியமாகும். அதேநேரத்தில் நில உரிமையாளர்களுக்கு உரிய இழப்பீடு வழங்குவதும் அவசியம். இந்த மாநிலச் சட்டத் திருத்தம் கொண்டு வருவதன்மூலம் வளர்ச்சிப் பணிகளுக்குப் பாதிப்பு ஏற்படாமல், நில உரிமையாளர்களுக்குப் புதிய சட்டத்தில் வரையறுக்கப்பட்ட இழப்பீடு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, மேற்படி சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2014), மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

@ 20-2-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.